Copy of Deposition

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அ.வ.எண்.49/2025 நாள்: 09.04.2026

**வா.சா:– 1தேவி ஆஜர், சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

குறுக்கு விசாரணை ( பிரதிவாதி தரப்பில்):–

நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் தாவா A அட்டவணை சொத்தாக காட்டியுள்ள சொத்து சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், B அட்டவணை சொத்துதான் சரியான சர்வே எண் குறிப்பிட்டு விவரிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளேனா என்றால் ஆமாம். ஆரம்பத்தில் இந்த சொத்து ஒரு தங்காயி அம்மாள் என்பவரிடமிருந்து பாப்பம்மாள் என்கிற பாப்பாயம்மாள், சிவகிரி கிராமம், பழைய க.ச.எண்.348 ரீ.ச.எண்.744/4ல் உள்ள 882 சதுர அடியை கிரையம் பெற்று மேற்படி பாப்பம்மாள் என்கிற பாப்பாயம்மாள் 21.10.2005 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் மூலம் மேற்படி சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பாப்பம்மாள் என்கிற பாப்பாயம்மாள் 06.04.2006 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். பாப்பம்மாள் என்கிற பாப்பாயம்மாள் இறந்ததற்கு பின்னிட்டு 21.10.2005 உயில்படி பிரதிவாதிதான் தாவா B அட்டவணை சொத்தின் உரிமையாளராக அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். நான் பிரதிவாதியிடமிருந்து காலி இடமாகத்தான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். பிரதிவாதி அவருக்கு எந்த வழியாக சொத்து வந்ததோ அதில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் குறிப்பிட்டுதான் கிரையம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். சர்வே எண் தவறாக உள்ளது என்று எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் நாங்கள் வீடு கட்ட கடன் வாங்கும் சமயத்தில்தான் தெரிந்து கொண்டேன். அதற்கு பின்னிட்டு பிரதிவாதியிடம் சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது அதை திருத்தி தருமாறு வழக்கிற்காக பொய்யாக சொ ல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா B அட்டவணை சொத்தில் நான்தான் சுவாதீனத்தில் உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்தை பிரதிவாதி எந்த விதத்திலும் தொந்தரவு செய்யவில்லை, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த தாவாவிற்கு வழக்கு மூலமே இல்லை என்றால் சரியல்ல.

**Copy of Deposition**

பிரதிவாதிக்கு எதிராக செலவு தொகை இல்லாமல் தீர்ப்பாவதில் ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.04.09 15:37:44 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |